[1973 நவம்பர் 30

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, அந்தப் பேருந்து நீட்டிப்பு நான்கைந்து கிராமங்களை இணைக்கின்ற காரணத்தினால் தயவுசெய்து அது மறுபரிசீலனை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சாலைகளிலே பல இடங்களிலே படுகை வளைவுகள் இருப்பதால் பஸ்களை விடமுடியாது என்ற தகவலைத் தந்திருக்கிறார்கள்.

பெரியபாளையத்தில் அனாதை இல்லம்

*** 536 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் வினா எண் 264-க்கு 22—3—1972-ல் அளித்த விடையையொட்டி தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், பெரியபாளையம், பவானி அம்மன் கோயில் நிர்வாகத்தின் கீழ் அனாதை இல்லம் ஒன்றை அமைக்கும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : திருக்கோயிலுக்குச் சொந்தமான ஒரு சத்திரத்தினை பழுதுபார்த்து விரைவாக அனாதை இல்லம் ஆரம்பிக்க ரூ. 26,800-க்கான மதிப்பீடு இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், ஏதாவதொரு வாடகைக் கட்டிடத்தில் தற்போதைக்கு அனாதை இல்லம் ஆரம்பிக்க சாத்தியக்கூறு உள்ளதா என்பதை ஆராயுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, அரசு இவ்வளவு ஆர்வத்தோடு இருந்தும்கூட தனிப்பட்ட கோயில்களைப் பொறுத்த வரையில் அவர்களுடைய நிர்வாகத்தின்கீழே இருப்பதால் நிறைய வருமானம் வந்தாலும்கூட அவர்கள் இதிலே தாமதம் காட்டுகிறார்கள். ஆகவே வருகின்ற கல்வியாண்டிலிருந்தாவது அங்கே அனாதை இல்லம் தொடங்குவதற்கான சிறப்பு ஆணை பிறப்பிக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : யாரும் தாமதப்படுத்தவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை உடனே கடந்த 4—4—1972 ஆம் தேதி கொடுத்தபொழுது

1973 நவம்பர் 30]

உடனடியாக அதை ஆரம்பிக்கத் தேவையான கட்டட வசதிகள் இல்லாமல் அங்கேயே இருந்த பழைய சத்திரத்தைப் புதுப்பித்தோ மேலும் ஒரு வாடகைக் கட்டடத்தைத் தேடியோ அதை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தேவையான நடவடிக்கை எடுக்க ஆணையருக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். வடிவேல்: தஞ்சை மாவட்டத்திலேயே வைத்திஸ்வரன் கோயிலுக்கு 1,000 வேலி நிலம் இருக்கிறது. அந்த மாதிரி ஸ்தலங்களிலே அனாதை விடுதிகள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, எந்த எந்தக் கோயில்களிலே போதுமான நிதிவசதி இருக்கிறதோ, உபரி நிதி இருக்கிறதோ அந்தக் கோயில்களிலே அந்தக் கோயில்களின் அறங்காவலர்கள் தீர்மானம் செய்தால் அதை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, அனாதைக் குழந்தைகள் இறைவனுடைய குழந்தைகள் என்று எண்ணுகின்ற மதவாதிகள் தமிழகத்திலே உள்ளவர்கள். ஆகவே ஏராளமான நிதி வசதி இருக்கின்ற அபரிமிதமான வருமானம் வருகின்ற கோயில்களிலே நிதிபெற்று அனாதை விடுதிகள் கட்டி அவர்களைப் பராமரிக்கக்கூடிய முறையில் ஒரு சட்டத்தை அரசு கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே சட்டத்திலே அதற்கு வழிவகை இருக்கிற காரணத்தினால் தமிழ்நாட்டிலேயுள்ள கோயில்களிலே, 13 கோயில்களின் மூலமாக இதுபோன்ற அனாதைவிடுதிகளை நடத்திக்கொண்டு வருகிறோம். மேலும் மேலும் எந்த எந்தக் கோயில்களிலே நிதி வசதியிருக்கிறதோ அந்தக் கோயில்களின் மூலமாக அவற்றை ஆரம்பிப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

வடபழனி கோயில் நிர்வாகத்தின் மூலம் கட்டடப் பணி

***537 வினா—திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடபழனி ஆண்டவர் கோயில் நிர்வாகிகளுக்குக் குடியிருப்புகள் கட்டித் தருவதற்கான திட்டம் ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?